முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.ஜி.அசோக் பிரசாத், B.A., B.L., M.S.E.N.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2025 ம் வருடம் அக்டோபர் மாதம் 22 ம் நாள்
(திருவள்ளுவராண்டு 2056 – விசுவாவசு வருடம் -ஐப்பசி திங்கள் 5 ம் நாள்)
இடைநிலை மனு எண்.8/2025
மேல்முறையீட்டு வழக்கு எண்.20/2020

1. எஸ்.நடராஜன் (இறப்பு)
மேல்முறையீட்டாளரின் வாரிசுதாரர்கள்
2. என்.ராஜேஸ்வரி
3. என்.பரணிதரன்
.. மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள்/உத்தேச தரப்பினர்கள்

// எதிர் //

1. ஈ.சம்பத்குமார்
2. எஸ்.பானுமதி
3. சுகந்தா
4. பி.கே.ராஜன்
5. எஸ்.பழனிசாமி
6. ஏ.பி.ராஜலட்சுமி
7. எஸ்.கவிதா
8. தமிழ்செல்வி
9. சுந்தராம்மாள்
10.விபாஸ் பிரபு .. எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்
மேல்முறையீட்டாளரின் வாரிசுதாரர்கள்
1. எம்.திவ்யா ..எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர்

04.07.2025 தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 22, விதி 9 மற்றும் பிரிவு 151 ன்படி 3 ம் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, இறந்து போன 1 ம் மனுதாரரின் வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுக்காததால் அற்றுப் போன உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 15.10.2025 ம்தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் திரு.ஏ.பி.சி.கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.பி.எஸ்.தாமோதரன் வழக்கறிஞர் அவர்களும், 3, 6 முதல் 9 மற்றும் 11 வது எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகததால் அவர்களை பொருத்து ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டும், 10 வது

எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

இறந்து போன மனுதாரர்/மேல்முறையீட்டாளரின் வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுக்காததால் அற்றுப் போன உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம்:</u>

மனுதாரர் இந்த மனுவில் 3 வது மனுதாரர் என்றும், மனுதாரரின் தந்தை மேற்படி மேல்முறையீட்டை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் போது இந்த மனுதாரரின் தந்தை கடந்த 18.02.2025 ம் வருடம் தனது மனைவி(2 வது மனுதாரர்), மகன்(3 வது மனுதாரர்) மற்றும் மகள் (11 வது எதிர்மனுதாரர்) ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், மேற்படி மேல்முறையீட்டு நடவடிக்கைகளை தொடர இந்த 2 மற்றும் 3 மனுதாரர்களை உத்தேச தரப்பினர்களாக சேர்க்கவேண்டியது அவசியம் என்றும், இறந்து போன நடராஜன் அவர்களது மகள் எம்.திவ்யா தங்களுடன் ஒத்துழைக்காததால் அவரை இந்த மேல்முறையீட்டில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டிருப்பதாகவும், 2 மற்றும் 3 வாரிசுகளை தரப்பினர்களாகச் சேர்க்க நடவடிக்கை எடுக்காததால், அந்த சங்கதிளைப் பொருத்து மேல்முறையீடு அற்றுப் போய்விட்டதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி உத்தரவை ரத்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால், மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும் பாதிப்பும் ஏற்பட்டுவிடும். எனவே, இந்த மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

3. <u>10 ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:</u>

இந்த மனு பொய்யானது, சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் வேண்டுமென்றே காலதாமதத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் 1 வது மேல்முறையீட்டாளர் இறந்த

பின்னிட்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு தற்போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் உண்மையல்ல என்றும், எனவே, இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. <u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில், மனுதாரரின் தந்தை மேற்படி மேல்முறையீட்டை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் போது இந்த மனுதாரரின் தந்தை கடந்த 18.02.2025 ம் வருடம் தனது மனைவி(2 வது மனுதாரர்), மகன்(3 வது மனுதாரர்) மற்றும் மகள் (11 வது எதிர்மனுதாரர்) ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், மேற்படி மேல்முறையீட்டு நடவடிக்கைகளை தொடர இந்த 2 மற்றும் 3 மனுதாரர்களை உத்தேச தரப்பினர்களாக சேர்க்கவேண்டியது அவசியம் என்றும், இறந்து போன நடராஜன் அவர்களது மகள் எம்.திவ்யா தங்களுடன் ஒத்துழைக்காததால் அவரை இந்த மேல்முறையீட்டில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டிருப்பதாகவும், 2 மற்றும் 3 வாரிசுகளை தரப்பினர்களாகச் சேர்க்க நடவடிக்கை எடுக்காததால், அந்த சங்கதிளைப் பொருத்து மேல்முறையீடு அற்றுப் போய்விட்டதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி உத்தரவை ரத்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால், மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும் பாதிப்பும் ஏற்பட்டுவிடும் என்று வாதிடப்பட்டுள்ளதைப் பொருத்து, 10 ம் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் வேண்டுமென்றே காலதாமதத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் 1 வது மேல்முறையீட்டாளர் இறந்த பின்னிட்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு தற்போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் உண்மையல்ல என்றும் முன் வைத்துள்ள கூற்றைப் பொருத்து மேல்முறையீட்டு வழக்கு விசாரணையின்போது முடிவு செய்து கொள்ளலாம்

என்றும், மேல்முறையீடானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி 2, 3 மனுதாரர்கள் மேல்முறையீட்டாளரின் சட்டப்படி வாரிசுகள் என்பதால் தாவாச் சொத்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களையும் சேர்த்து மேல்முறையீட்டை நடத்தினால்தான் மேல்முறையீட்டு வழக்கு முழுமை பெரும் என்பதாலும், மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ளபடி உத்தேச தரப்பினர்களை சேர்க்க மனுவை அனுமதிப்பதால், எதிர்மனுதாரர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்பதாலும், மனுதாரர்கள் தாக்கல் செய்த இறந்து போன மேல்முறையீட்டாளரின் வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுக்காததால் அற்றுப் போன உத்தரவை ரத்து செய்து உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக.

இம்மனுவை அனுமதித்து மனுதாரர்கள், செலவு தொகையாக ரூ.1,000/-ஐ 1 ம் எதிர்மனுதாரருக்கும், 2 வது எதிர்மனுதாரருக்கு ரூ.1,000/-மும், 10 வது எதிர்மனுதாரருக்கு ரூ.2000/-மும் 29.10.2025 க்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 29.10.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ம் வருடம் அக்டோபர் மாதம் 22 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

G ASHOK PRASATH Digitally signed by G ASHOK PRASATH

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
ஈரோடு.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>

(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை...)

G ASHOK PRASATH Digitally signed by G ASHOK PRASATH

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
ஈரோடு.

<u>அசல்/வரைவு உத்தரவு</u>
<u>இ.ம.எண்.20/2020</u>
<u>மே.மு.வ.எண்.20/2020</u>
நாள் 22.10.2025

மு.கூ.சா.நீ.ம., ஈரோடு.